# 3

# தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிதல்

தாழ்மையும், தவறுக்கான மனவருந்துதலும் உள்ளவர்களுக்கு கிருபையும் சத்தியமும் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. பாவமும் கலகமும் கொண்டவர்களுக்கு நியாயத்தீர்ப்புகள் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிறது. "நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்"-சங்கீதம் 89:14. துன்மார்க்கமும் வேசித்தனமும் கொண்ட மக்கள் தாங்கள் நியாயமாக சம்பாதித்திருக்கிற தண்டனையாகிய தேவகோபத்துக்குத் தப்பமாட்டார்ாகள். மனிதன் விழுந்துவிட்டான். பாவத்தினாலும், தொடர்ந்த மீறுதலினாலும் இழந்துபோன தெய்வீக சாயலை கிறிஸ்துவினாலே மீண்டும் பெறும்படி வாழ்நாள் முழுவதும்—அது குறுகினதாயிருந்தாலும், நீண்டதாயிருந்தாலும் முயற்சிப்பது அவனுடைய வேலையாக இருக்கிறது. ஆதாமின்வழியாக இழந்துபோன நம்முடைய நிலையை நாம் மீண்டும் பெறுவதற்கு மனதிலும் சரீரத்திலும் ஆவியிலும் முழுமையான மாறுதல் அடைந்திருக்கவேண்டும் என்று தேவன் எதிர்பாபர்க்கிறார். மனிதனுக்கு அவனுடைய உண்மையான நிலையை காண்பிப்பதற்காக தேவன் கிருபையாக ஒளிக்கதிர்களை அனுப்புகிறார். அந்த வெளிச்சத்தில் நடக்காவிட்டால், அவன் இருளின்மேல் ஒரு பிரியத்தை வெளிக்காட்டுகிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடி அவன் ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்.

இன்றைய பெயர் சபைகள் கீழான இச்சையோடுகூடிய உணர்ச்சிகளின் விளைவாக, விபசாரத்தினாலும் வேசித்தனத்தினாலும் நிறைந்திருக்கின்றன. ஆனால் பெருமளவில் இவைகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்த இடங்களில் இருக்கும் ஊழியர்கள், குற்ற உணர்ச்சியோடு இருக்கிறார்கள். என்றாலும் தேவனுக்குப் பயப்படும் தோற்றம் அவர்களுடைய இருண்ட செய்கைகளை மறைத்திருக்கிறது. வருடாவருடம் தங்களுடைய மாய்மாலத்திலேயே தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் பரலோகத்தை எட்டிவிட்டது.

விபசாரமும் வேசித்தனமும் தேவன் காணாதவர்போல விட்டுவிடுகிற பாவங்கள் என்று அநேக கிறிஸ்தவர்களால் கருதப்படுகிறது. இவைகள் மிக அதிகமாக செய்யப்படுகின்றன. தங்கள்மேல் இருக்கும் தேவனுடைய பிரமாணங்களின் உரிமைகளை அவர்கள் ஒத்துக்கொள்ளுவது—

உணருவது இல்லை. மாபெரும் யெகோவா தேவனுடைய பிரமாணங்களை மாற்றி, தங்களை கேட்கிறவர்களுக்கும் அப்படியே போதித்து, தேவனுடைய கட்டளைகள் ஒழிக்கப்பட்டது எனவே அவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லை என்று அறிவிக்கிறார்கள். இந்த சுதந்திர நிலையில் பாவம் மிகப்பெரிய பாவமாக தோன்றுவதில்லை. ஏனெனில் பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினாலே அறிகிறோம். இவ்வாறு போதிக்கிறவர்களுக்கு மத்தியில் ஏமாற்று, பொய்சொல்லி இச்சையோடிருக்கிற மனிதர்களை நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் பத்துக்கற்பனைகள் இன்னும் நம்மை கட்டுப்படுத்துகிறது என்று ஒத்துக்கொள்ளும்படி ஆண்களும் பெண்களும் சீனாயில் பயங்கரமான மகிமையோடு கொடுக்கப்பட்ட பத்து நியமங்களின் கொள்கையையும் தங்கள் வாழ்க்கையில் கடைபிடிக்கவேண்டும்.

"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்" (யாத்திராகமம் 19:5,6) என்கிற விசேஷ உடன்படிக்கையை தேவன் பழைய இஸ்ரவேலரோடு ஏற்படுத்தினார். இந்த கடைசி காலங்களில் தமது கற்பனையைக் கைக்கொள்ளுகிற பிள்ளைகளிடம்: "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9) என்று கூறுகிறார்.

ஆனால் தேவனுடைய கற்பனைகளைக் கடைபிடிக்கிறோம் என்று சொல்லுகிற அனைவரும், தங்கள் சரீரத்தை பரிசுத்தத்திலும் மதிப்பிலும் வைத்திருக்கவில்லை. தாங்கள் அறிவிக்கிற சத்தியத்தினால் அவர்கள் பரிசுத்தமடைவார்களானால், வல்லமையான செல்வாக்கை கொண்டிருப்பார்கள். தேவனுடைய கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு, உயர்த்தப்பட்ட நித்திய சத்தியத்தின்மேல் தாங்கள் நின்றுகொண்டிருப்பதாக சொல்லுகிறார்கள். ஆதலால், பாவத்தில் திளைத்து, விபசாரமும் வேசித்தனமும் செய்வார்களானால், அவர்களுடைய குற்றம், தேவனுடைய பிரமாணம் எங்களை கட்டியிருக்கிறதை ஒத்துக்கொள்ளவில்லை என்று நான் குறிப்பிட்ட மக்களின் குற்றங்களைவிடவும் பத்துமடங்குகள் அதிகமாயிருக்கும். தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவதாக கூறுபவர்கள், விசித்திரமான முறையில் அவரை அவமதித்து, அந்த

பிரமாணங்களை மீறுவதின்வழியாக சத்தியத்தை பரிகசிக்கிறார்கள்.

தேவனுடைய அதிருப்தியின் வெளிப்பாடுகளைக் கொண்டுவந்த இதே பாவம்—வேசித்தனம், ஆதிகால இஸ்ரவேலர்களிடமிருந்தது. அவர்களுடைய வெறுக்கத்தக்க பாவத்தின்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் விழுந்தன. அவர்களில் ஆயிரக்கணக்கானோர் விழுந்தனர். அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்தன. "அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது. ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள். அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரேநாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" -1 கொரிந்தியர் 10:5-12.

உலகமக்கள் அனைவரைவிடவும், தேவனுடைய ஜனங்கள் பக்திக்கும், மனதிலும் வாழ்க்கையிலும் இருக்கும் பரிசுத்தத்திற்கும் மாதிரிகளாக இருக்கவேண்டும். தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம், இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பி திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாவதற்காக உயர்ந்த, சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மேன்மையாக அழைத்துக்கொள்ளும் இப்படிப்பட்டவர்கள் பாவத்திலும் அக்கிரமத்திலும் திளைத்தால், அவர்களுடைய குற்றம் மிகப்பெரியதாயிருக்கும். ஏனெனில் அவர்கள் அதிகவெளிச்சத்தைப் பெற்று தங்கள் கூறிக்கொள்ளுவதுபோல தேவனுடைய விசேஷ ஜனங்களாக, தேவனுடைய பிரமாணங்கள் தங்கள் இருதயத்திலே எழுதப்பட்டவர்களாக, தெிந்துகொள்ளப்பட்டவர்கள் என்ற இடத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவருடைய அரசாங்கத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதன்வழியாக, பரலோக தேவனுக்கு உண்மையாயிருப்பதைக் காட்டுகிறார்கள். இப்பூமியின்மேல் அவர்கள் தேவனுடைய முகவர்களாக, பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அவர்களிலிருக்கிற எந்தப் பாவமும் அல்லது மீறுதலும், அவர்களை தேவனைவிட்டுப் பிரிக்கிறது. விசேஷமாக, அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று தேவன் அழைத்த மக்கள், தேவனுடைய காரியங்களையும் அவரது மக்களையும் தூஷிக்கத்தக்கதாக தேவனுடைய எதிரிகளுக்கு சமயம் கொடுத்ததன் வழியாக அவருடைய நாமத்தை அவமதிக்கிறார்கள்.

யெகோவா தேவனுடைய சட்டங்களோடு யுத்தஞ்செய்து, அதற்கு விரோதமாக, அந்தப் பிரமாணங்களுக்குப் பகையைக் காண்பிக்கும்படியாக மிக கசப்பான வெறுப்பான காரியங்களை பேசுவதும் எழுதுவதும், அப்படி நடப்பதும், தங்களது விசேஷ வேலை என்று நினைக்கிறவர்கள், தேவனுடைய அன்பைக்குறித்து உயர்ந்த உன்னதமான நிலையை அறிவிக்கலாம். யூத ஆசாரியர்கள் மூப்பர்களைப்போல அதிக பக்திவைராக்கியம் காண்பிக்கலாம். என்றாலும், தேவனுடைய நாளிலே “குறைய காணப்பட்டாய்” என்று பரலோக மேன்மையானவரால் அவர்களுக்குச் சொல்லப்படும். பாவத்தைக்குறித்த அறிவு நியாயப்பிரமாணத்தினாலே உண்டாகிறது. அவர்களுடைய குணக்குறைகளை வெளிக்கொண்டுவருகிற கண்ணாடிக்கு எதிராக அது அவர்களுடைய பாவங்களைச் சுட்டிக்காட்டுவதால் அவர்கள் வெகுண்டிருக்கிறாக்ள். வெளிச்சத்தை நிராகரித்த ஊழியக்காரர்கள், தேவகுமாரனுக்கெதிராக யூத ஆசாரியர்கள் கோபங்கொண்டதைப்போல தேவனுடைய பிரமாணங்களுக்கு எதிராக கொந்தளிக்கிறார்கள். அவர்கள் பயங்கரமான வஞ்சகத்திலிருக்கிறார்கள். தங்களைத்தாங்களே வஞ்சித்து, ஆத்துமாக்களையும் வஞ்சிக்கிறார்கள். தங்கள் கிரியைகள் கண்டிக்கப்படும்படி அவர்கள் ஒளியினிடத்திற்கு வரமாட்டார்கள். அவர்கள் கற்பிக்கப்படமுடியாது. ஆனால் தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுகிறவர்களை அவர் கடிந்துகொண்டு திருத்துகிறார். தமக்கு பயப்படும் பயத்தினால் அவர்கள் பரிசுத்தத்தைப் பரிபூரணப்படுத்தும்படியாகவும், கர்த்தருக்குள் மரிக்கவோ அல்லது பரலோகத்திற்கு செல்ல மறுரூபமாகவோ அவர்கள் ஆயத்தப்படும்படும்படியாகவும், அவர்களிலிருந்து எல்லா பாவங்களையும் அக்கிரமங்களையும் அகற்ற அவர் விரும்புகிறபடியால், அவர்களுடைய பாவங்களை அவர் சுட்டிக்காட்டி அவர்களுடைய அக்கிரமங்களை வெளிக்கொண்டுவருகிறார். அவர்கள் முடிவாக சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு, அவருடைய சிங்காசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்காக தேவன் அவர்களை கண்டித்து

கடிந்துகொண்டு திருத்துகிறார்.

தேவனுடைய ஜனங்கள் அனைவரும் பரிசுத்தமாக இல்லை. சிலர் மாசுபட்டிருக்கிறார்கள். அவர்களை உயர்த்த தேவன் வகைதேடுகிறார். ஆனால் அவர்கள் உயர்ந்த செயல்பாட்டிற்கு வர மறுக்கிறார்கள். மிருக உணர்ச்சிகள் அடித்துக்கொண்டுபோக, சன்மார்க்க அறிவுத்திறன்கள் மூழ்கிவிடுகிறது. அவர்கள் மிருகஉணர்வுகளுக்கு அடிமைகளாகிறார்கள். தங்களுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாதவர்களால், மீட்பை மேன்மையாக பார்க்கமுடியாது. ஆத்துமாவின் மதிப்பையும் நிதானிக்கமுடியாது. இரட்சிப்பு அவர்கள் அனுபவப்பட்ட ஒன்றாகவோ அல்லது அவர்கள் புரிந்துகொண்ட ஒன்றாகவோ இல்லை. தங்களுடைய மிருக உணர்ச்சிகளை திருப்திப்படுத்துவதே அவர்களுக்கு வாழ்க்கையின் உன்னதமான நோக்கமாக இருக்கிறது. தூய்மைக்கும் பரிசுத்தத்திற்கும் குறைவான எதையும் தேவன் அங்கிகரிக்கமாட்டார். ஒரு கறையோ, ஒரு சுருக்கமோ, ஒரு குணக்குறையே இருக்குமானால், அது அவர்களை பரலோகத்திலிருந்து, அதனுடைய அனைத்து மகிமையான பொக்கிஷங்களிலிருந்து என்றைக்குமாக வெளியே அடைக்கும்.

உண்மையாகவும், ஊக்கமாகவும், முழுமையாகவும் தேனுக்குப் பயப்படும் பயத்தோடு பரிசுத்தமாகுதலை தொடருகிறவர்களுக்கு அனைத்து வழிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இரட்சிப்பை சுதந்தரிக்கப்பபோகிறவர்களுக்கு பணிவிடை ஆவிகளால் கொண்டுவரப்படும்படியாக வல்லமையும் பெலமும், கிருபையும் மகிமையும் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசுவை கண்டுகொள்ளக்கூடாதபடி எவரும் மிகக் கீழாகவோ, கெட்டுப்போயோ, அல்லது துன்மார்க்கமாகவோ இல்லை. அவர்கள் தங்களுடைய பாவங்களை விட்டொழித்து, அக்கிரமப்பாதையிலிருந்து திரும்பி, இருதயத்தின் முழு நோக்கத்தோடும் ஜீவனுள்ள தேவனிடத்திற்கு திரும்பினால் தங்களுக்காக மரித்த இயேசுவில் பலத்தையும் தூய்மையையும் நீதியையும் கண்டடையலாம். கறைபட்டு பாவத்தால் மாசடைந்திருக்கிற அவர்களுடைய ஆடைகளை அவர் உரிந்து, தூய்மையான நீதியின் வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி, சாகாதபடி பிழைத்திருக்கச் செய்வார். அவரில் அவர்கள் செழிக்கலாம். அவர்களுடைய கிளைகள் காய்ந்துபோகாது; கனியற்றிருக்காது. அவர்கள் அவரில் நிலைத்திருந்தால், அவரிடமிருந்து உயிர்சாற்றையும் சத்தையும் எடுத்துக்கொள்ளலாம். அவருடைய ஆவியினால் ஊக்கப்படுத்தப்பட்டு, அவர் நடந்ததுபோலவே நடக்கலாம். அவர் வெற்றிகொண்டதுபோலவே வெற்றிகொள்ளலாம். அவருடைய வலது பாரிசத்துக்கு உயர்த்தப்படலாம்.

“ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்”- ரோமர் 6:12,13. இந்த வார்த்தைகளில் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தைத்தவிர வேறு அதிக வெளிச்சம் உங்களுக்கு இல்லாதிருந்தாலும், கிறிஸ்தவர்களே, கீழான உணர்ச்சிகளினால் கட்டுப்படுத்தப்படுவீர்களானால் நீங்கள் சாக்கு சொல்லமுடியாது. மிகவும் மந்தமான மனதையும் பிரகாசிப்பிக்க தேவனுடைய வார்த்தை போதுமானதாக இருக்கிறது. புரிந்துகொள்ள வாஞ்சைகொண்டிருக்கிற அனைவராலும் அது புரிந்துகொள்ளப்படும். இவையெல்லாம் இருந்தும், தேவனுடைய வார்த்தையை தங்களுடைய ஆராய்ச்சியாகக்கொண்டிருப்பதாக சொல்லிக்கொள்ளும் சிலர், வெளிப்படையான இந்த போதனைகளுக்கு எதிர்திசையில் வாழ்ந்துகொண்டிருப்பது தெரிகிறது. ஆண்களையும் பெண்களையும் எவ்வித சாக்குப்போக்கும் சொல்லக்கூடாத இடத்தில் நிறுத்துவதற்காக, பின்பற்ற நெகிழ்ந்த வார்த்தைகளுக்கு அவர்களைக் கொண்டுவந்து, தெளிவான குறிப்பான சாட்சிகளை தேவன் கொடுத்திருக்கிறார். ஆனாலும் தங்களுடைய இச்சைகளை சேவிக்கிறவர்களால் அனைத்து வெளிச்சமும் திருப்பப்படுகிறது. அவர்கள் தங்களுடைய பாவ வாழ்க்கையை நிறுத்தமாட்டார்கள். மாறாக இப்படிப்பட்டவைகளைச் செய்பவர்கள்மேல் பயங்கரமாக நீதிசெலுத்தும் தேவனுக்குமுன்பாக தங்களுடைய அநீதிகளில் இன்பம் காணத் தொடருகிறார்கள்.